1990 மார்ச் 29]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

குடிசை மாற்று வீடுகளைப் பழுதுபார்த்தல்

* 5197—திரு. செங்கைசிவம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு மாடிவீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா:—

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியக் கட்டிடம் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும் திட்டத்தின் அடிப்படையில் (ஸ்பெஷல் ரிப்பேர்ஸ்) ரூபாய் 16.63 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு நிதி உதவியுடன் ஹட்கோ கடன் உதவியோடு இந்தப் பணி தற்போது நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாடிக் கட்டிடங்கள் பல ஆண்டுக் காலமாக பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்பதையும் அதே நேரத்தில் 20 ஆண்டுக் காலமாக இம்மாடிவீடுகளில் குடியிருப்பவர்கள் வாடகை செலுத்தி வந்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு பராமரிக்கிற செலவு வேறு ஏற்படுகிற காரணத்தாலும் அம்மாடிவீடுகளில் குடியிருப்பவர்களுக்கே அவ்வீடுகளை சொந்தமாக்குகிற செயல் குறித்து அரசிடம் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

10–30 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் இந்தியாவிலேயே முதன் முதலாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களாலே உருவாக்கப்பட்டது. அன்றைய தினம் இருந்து, கட்டப்பட்ட குடியிருப்புகள் இதுவரையிலேயும் பழுது பார்க்கின்ற பணி எதுவும் நடைபெறவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் இன்றைக்கு சென்னையி’ மட்டும் 121 குடியிருப்புப் பகுதிகள் பழுதடைந்திருப்பதாக

கணக்கிடப்பட்டு இரண்டு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பழுது பார்க்கின்ற பணி தற்போது நடைபெறு கின்றது. அண்மையில் சென்னையிலுள்ள வியாசர்பாடியில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு கட்டிடத் திறப்பு விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'குடியிருப்பவர்களுக்கே அந்தக் குடியிருப்புகளை உடமையாக்கித் தருவதற்கு அரசி னுடைய பரிசீலனையில் இருக்கிறது' என்று அந்த விழாவிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அரசு அது தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆண்டுக் காலமாக செயலற்றுப் போன குடிசை மாற்று வாரியம் மீண்டும் புத்துயிர் பெற்று, இந்த நிதி ஆண்டில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இம்மாடி வீடுகளைக் கட்டுவதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டு, அவைகள் செயல்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. வருகிற நிதியாண்டில், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடி வீடு களைக் கட்டுவதற்காக நிதிநிலை அறிக்கையில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து, குடிசைவாழ் மக்கள் வயிற்றிலே பால் ஊற்றியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம், அவர்களுக்கு அவ்வீடுகளைச் சொந்தம் ஆக்கு கின்ற வகையில், 'ஹையர் பர்ச்சேஸ் ஸ்கீம்' தவணை முறைத் திட்டத்தினை அந்த 12 ஆயிரம் வீடுகளுக்குச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனையிலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, முந்தைய ஆட்சி இருந்த போது சென்னை நகரத்திலும் மற்ற இடங்களிலும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக, குறிப்பாக சென்னை நகரத்தில் பல மாடி வீடுகள் கட்டப்பட்டன. அதற்குப் பிறகு அவைகள் எல்லாம் சரியாகப் பழுது பார்க்கப் படாத காரணத்தினால் இன்றைக்கு மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, சென்னை நகரம் முழுவதும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாகக் கட்டப்பட்ட மாடி வீடுகள் அனைத்தையும் பழுது பார்க்க அரசு முன் வருமா ? அதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமா ? அதற்கென ஒரு ஆய்வு நடத்தி அதன் அடிப்படையில் உடனடியாக துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும் 129 குடியிருப்புப் பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் 48,904 குடியிருப்புகள் இருக்கின்றன. அவற்றில் 121 குடியிருப்புப் பகுதிகள் பழுதடைந்திருப்பதாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அத்தனை பகுதிகளிலும் இரண்டு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்க்கின்ற பணி தற்போது நடைபெறுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் – விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் திரும்பாதது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தின் அருகில் இருக்கக் கூடிய ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் தினசரி கடலுக்கு போய் மீன் பிடித்து வந்து வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தவர்கள், அந்த முறையில் நேற்று இரவு 28-ஆம் தேதி இரவு கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில், 65 படகுகளிலே சென்ற அந்த மீனவர்களும், 65 படகுகளும் திரும்ப இன்று காலையிலே நாகைத் துறைமுகத்திற்கு வந்திருக்க வேண்டியது வரவில்லை. அதற்குப் பிறகு வந்த மற்றவர்களை விசாரித்ததில் அந்த 65 படகுகளையும், அதில் இருந்தவர்களையும் கடத்திச் சென்று இருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கடத்திச் செல்லப்பட்டது இலங்கைக் கடற்படையினால் இருக்குமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. அதனுடைய விளைவாக நாகையைச் சுற்றி இருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் மத்தியில் மிகப் பெரிய ஒரு கவலையும், பதட்டமான நிலையும் நாகப்பட்டினத்தில் நிலவுகிறது என்ற செய்தி காலையில் அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலமாக கூறப்பட்டது. அப்படி அந்த 65 படகுகளும், அதில் இருந்தவர்களும் என்ன ஆனார்கள், எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரியாததனால் மிகப் பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.